# கீதாரி நாவலில் பெண்ணிய சிக்கல்கள்

*மோ. பூஜா*
இரண்டாமாண்டு முதுகலைபட்ட மாணவி, தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வெட்டுக்காடு, சேந்தமங்கலம், நாமக்கல்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783729

***ஆய்வுச் சுருக்கம்***

*கீதாரி நாவலில் இக்கால இலக்கியத்தில் நாவல் முக்கிய இடம் பெற்றுள்ளது. பெண் எழுத்தாளர்கள் இன்று நாவல் எழுதுவதில் ஆர்வம் காட்டுகின்றனர். அதுவும் பெண்களுக்காக குரல் கொடுக்கும் வகையில் தைரியமாக படைப்புகள் அமைகின்றன. அந்த வகையில் பெண்களுக்கு எதிராக கொடுமைகளாக இருக்கும் வரதட்சணை, கல்வி மறுப்பு, தற்கொலை, திருமண முறை, பெண் சார்ந்த நம்பிக்கைகள், வாழ்க்கை போராட்டம் இவற்றின் மூலம் பெண்களுக்கு நடக்கும் கொடுமைகளை இன்னாவலின் மூலம் ஆராயப்பட்டுள்ளன.*

***கலைச்சொற்கள்:*** *கீதாரி, வரதட்சணை, பெண், கல்வி, ஒழுக்கம்.*

## முன்னுரை

*பிரதான கலாச்சாரத்தில் தன்னை ஒரு பெண்ணியவாதி என்று அடையாளம் காண்பது ஒரு நாகரிகமாக இருந்து வருகிறது. பெண்ணியம் ஆண் உறுப்பினர்களுக்கு சமூகத்தில் பெண்களை இழிவுபடுத்தும் மற்றும் பறிக்கும் அனைத்து பிரச்சனைகளையும் உள்ளடக்கியது மற்றும் இது உலகம் முழுவதும் பெண்களுக்கு மீதான அட்டூழியங்களுக்கு எதிரான போராட்டத்தை தொடங்கியுள்ளது. இன்று பெண்கள் மீதான வன்கொடுமை அதிகரித்து வருவது கவலைக்குரிய விஷயமாக மாறி உள்ளது. அவர்களுக்கு எதிரான வரதட்சணை, திருமண முறை, தற்கொலை, இப்படி பெண்களின் நிலை பிரதான அனுபவத்திற்காக மாறாக உள்ளது. இந்த பெண்களின் கொடுமைகளை கீதாரி நாவலின் மூலம் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

## வரதட்சணை

*வரதட்சணை முறை என்பது சமூக வளர்ச்சிக்கும் சீர்கேடான ஒன்றாகும். வரதட்சனை என்பது சமுதாய தீமைகளுள் ஒன்றாகும், இந்திய சமுதாயத்தில் பெண்களுக்கு இழைக்கப்பட்ட இழைக்கப்படுகின்ற கற்பனைக்கு எட்டாத கொடுமை வரதட்சனை என்னும் கொடுமை ஆகும். இதனை,*

> ***முன் காலத்தில் திருமணம் பேசச் செல்வோர் பெண்களுக்கு விலை கொடுத்து பெண்ணை திருமணம் செய்து கொண்டார்'***

*என்று அகநானூறு உரையாசிரியர் இரா. செயபாலின் கூற்றுக்கு இணங்க அக்காலத்தில் பெண்களுக்கு வரதட்சணை கொடுமை இருந்துள்ளது என்பதை இதன் மூலம் அறியலாம்.*

*கீதாரி நாவலின் வரதட்சணை கேட்டு ராமு கீதாரி இருளாயி மகள் முத்தமாளை அவரது மருமகன் அடித்து துன்புறுத்தி உன் வீட்டுக்குச் செல் என்று கொடுமைப்படுத்தினான் என்று வரதட்சணை கொடுமை பற்றி முத்தம்மாள் கதாபாத்திரம் நமக்கு உணர்த்துகிறது.*

## பெண் கல்வி மறுப்பு

*பெண்கள் தன்னம்பிக்கையுடன் தம்மை தற்காத்துக் கொண்டு வாழ, சுய சிந்தனை, சுதந்திரம் பெற்று வாழ, பொருளாதார வளம் பெற கல்வியின் தேவை இன்றியமையாதது. பெண்களுக்கு கல்வி தடைபடல் கூடாதனவும்,*

*கல்வியை ஊக்குவித்தலும் முக்கியத்துவம் ஆனது என்பதை,*

***கண்ணுடையார் என்பவர் கற்றோர் முகத்திரண்டு***
***புண்ணுடையோர் கல்லா தவர்.[2]***

*என்ற குறள் கல்வியின் சிறப்பை எடுத்துக் கூறுகிறது. இப்படி இருக்கையில் பெண்களின் வளர்ச்சியையும் முக்கியத்துவத்தையும் ஏற்றுக் கொள்ள மறுத்த சில மூடர்கள் "அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்று நினைத்துப் பெண் கல்விக்கு மறுப்பு தெரிவிப்பதை,*

***"நீ படிச்சி என்னத்த கிழிக்க போற, ஊட்டோட கெட"***
***- (கீதாரி.ப.எ64)***

*என்பதிலிருந்து கல்வி மறுக்கப்படுவதாக கீதாரி நாவலில் சிவப்பி என்ற அனாதைப் பெண் கதாபாத்திரம் அமைகின்றது.*

**ஒழுக்கம்**

*மனிதன் பண்பாட்டாலும் நாகரிகத்தாலும் விலங்குகளிடமிருந்து வேறுபட்டவனாக வாழ்கிறான். அவ்விழுமியங்களுக்கு பங்கம் ஏற்படும் நிலையில் மனிதன் நல்லொழுக்கத்தை உயிரை விட மேலானதாக ஓம்ப வேண்டும்.*

*மானம் என்பதற்கான விளக்கத்தை பரிமேலழகர் தருகின்ற பொழுது "தன்னிலை தாழாமையும் தாழ்ந்துழி உயிர் வாழாமையும்" என்று கூறுகிறார்.இதனை கீதாரி நாவலில் சிவப்பியை வளர்ப்பு மகளாக வளர்த்த சாம்பசிவம் பாலியல் பலாத்காரம் செய்து மண்ணுக்குள் புதைத்தது தன்மானத்தை (ஒழுக்கத்தை இழந்த வாழ்க்கையாக அமைகிறது. மேலும் பெண்ணடிமைத்தனம் வெளிப்படுகிறது.*

**திருமணம்**

*காலம் காலமாக பெண்கள் சார்பு நிலை வாழ்க்கையை மேற்கொண்டு வரும் இக்கட்டான சூழலுக்கு ஆளாகியுள்ளனர். அக்காலத்தில் இருந்து பெண்களுக்கு கட்டாய திருமணம் இருந்துள்ளது.*

***வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும் வழக்கத்தை தள்ளி மிதித்திடுவோம்[3]***

*என்று பெண்களை கட்டாயப்படுத்தி திருமணம் செய்யும் வழக்கத்தை வேண்டாம் என்கிறார் பாரதி.*

*கீதாரி நாவலில் வெள்ளைச்சாமியின் கதாபாத்திரம் இதுபோல அமைகின்றது. திருமணம் முடிந்ததிலிருந்து இவர்கள் இருவரும் ஒன்றோடு ஒன்று சேர்ந்து மகிழ்ச்சியாக வாழ்ந்ததில்லை. கட்டாயத்திற்கு திருமணம் செய்து கொண்டதால் இவர்களது வாழ்க்கை சரியாக அமையவில்லை. திருமண வாழ்க்கையே முடிந்து விட்டது என்பதிலிருந்து திருமணம் முறையை அறிய முடிகிறது.*

**பெண்கள் சார்ந்த நம்பிக்கை**

*பெண்கள் சார்ந்த சில நம்பிக்கைகள் பெண்களை கொடுமைக்கு உள்ளாக்கி விடுகிறது.*

*பெண்களை தீட்டானவள் என்று கருதும் மூடநம்பிக்கையை கீதாரினாவில் சிறப்பி கதாபாத்திரம் வெளிக்கொணர்கின்றது.*

***"எவனுக்கோ பிறந்த பெண்ணோ எப்படி வீட்டிற்குள் விட முடியும், கன்னித்தீட்டு வீட்டைத் துடைத்து விடும். அவளை வீட்டிற்குள் விட்டால் அவர்களின் சாமிக்கு ஒத்துக்கொள்ளாது. வீட்டு சாமி வெளியேறி விடும் அவளையோ அவளுடைய துணிமணிகளையோ யாரும் தருவதில்லை"***

***- (கீதாரி.70)***

*என்று சிவப்பி பருவமடைந்ததை தீட்டு என்று கூறி சிவப்பிக்கு பல கொடுமைகள் நிறைவேறுவதாக கீதாரி நாவலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

**வாழ்வியல் போராட்டம்**

*சங்ககாலத்தில் இருந்து பெண்கள் ஆணாதிக்க சமுதாயத்தில் கணவனே தெய்வம் என்று கொண்டாடுபவர்களாக ஆணின் தேவையை மட்டும் நிறைவேற்றும் பணிப்பெண்களாகவே வாழ்ந்தார்கள்.*

***வினையே ஆடவர்குயிரே வாள்நுதல்***
***மனையுற மகளிர்க்கு ஆடவர் உயிர்***[4]

*என்ற குறுந்தொகை வரியிலும் ஆடவர் பாதுகாத்தல் பெண்களின் முக்கிய வேலையாக இருந்தது என்பதை அறிய முடிகிறது. இதை மையமாகக் கொண்டு, கீதாரி நாவலில் இருளாகி கதாபாத்திரம் அமைகின்றது. ராமு கீதாரி செய்யும் அனைத்து வேலைகளையும் இருளாயும் செய்து கொண்டு வீட்டிற்குள்ளேயே வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறாள். இதன் மூலம் பெண்களின் வாழ்க்கையை போராட்டத்தில் கொண்டிருந்தனர்.*

**முடிவுரை**

*இக்கட்டுரையின் மூலம் பெண்களுக்கு எதிராக நடந்து கொண்டிருக்கும் பிரச்சனைகள், பல்வேறு இழிவு முறைகள், வரதட்சணை, கல்வி மறுப்பு, திருமணம் முறை, பெண் சார்ந்த நம்பிக்கை, ஒழுக்கம், வாழ்க்கை போராட்டம் அக்காலத்தில் இருந்து இக்கொடிமைகள் நடந்து கொண்டிருக்கின்றது என்பதை அறிய முடிகிறது.*

**சான்றெண் விளக்கம்**


1. *செயபால்.இரா, அகநானூறு, பா.எ.90.*
2. *செந்தமிழ்ச் செழியன், திருக்குறள், கு. 393.*
3. *பாரதியின் கவிதைகள்,*
4. *புலியூர்கேசிகன், குறுந்தொகை, பா.எ.135.*


**துணை நூற்பட்டியல்**


1. *செந்தமழ் செழியன் - திருக்குறள் சக்தி பப்ளிகேசன் ஹவுஸ் சென்னை - 600 013.*
2. *செயபால்.இரா - அகநானூறு நியூ செஞ்சரி புக்ஹவுஸ் (ம) லிட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098.*